**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 350/2022 P.W.1/L.W 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஸ்டாலின் ஜெகன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. அருள்தாஸ் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 28.01.2026

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட 2,3 நபர்கள் ஆஜர் இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட 2,3 நபர்கள் தரப்பில் 317(1) மனு தாக்கல் செய்யப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட 2,3 நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது. அதனால் அடிக்கடி சாண்டம் சச்சின் பார்க்கு செல்வது வழக்கம். 21.02.2021 தேதியன்று காலை சுமார் 8.30 மணி முதல் 9.00 மணி அளவில் நான் சச்சின் பாரில் குடித்துக்கொண்டு இருக்கும் பொழுது கொற்றிக்கோடு காவலர்கள் மேற்படி சச்சின் பாருக்கு வந்தார்கள். அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள் நான் அந்த கடையில் பணிபுரியும் நபர் இல்லை என்பதால் என்னை வெளியோர சொன்னார்கள். மேலும் அவர்கள் அங்கு இருந்து மது பாட்டில்களை கைப்பற்றினார்கள். அதன் பிறகு வழக்கு பதிவு செய்தார்கள் என்பதை தெரிந்துகொண்டேன். இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

1. நான் என்ன கூலி வேலை செய்கிறேன் என்றால் கொத்தனாருக்கு உதவியாக வேலை செய்வேன். என் வீட்டில் இருந்து மேற்படி சச்சின் பார் எவ்வளவு தூரம் என்றால் 6 முதல் 7 கிலோ மீட்டர் இருக்கும். எங்கள் வீட்டில் இருந்து முட்டைக்காடு என்ற இடம் எவ்வளவு தூரம் என்றால் 3 1/2 கிலோ மீட்டர் இருக்கும். சம்பவம் நடைபெற்ற நாள் என்ன கிழமை என்றால் எனக்கு தெரியாது. போலீசார் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவ தேதியன்று பாரில் என்னை 8.30 மணி முதல் 9.00 வரைக்குள் என்னை விசாரித்தார்கள்.

2. நான் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்மீது காவல் நிலையத்தில் வழக்குகள் உள்ளதா என்றால் முன்னாள் ஒரு வழக்கு உள்ளது. அதன்பிறகு இல்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் கொற்றிக்கோடு காவலர்கள் கேட்டுக்கொண்டதான் பெயரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை</u>**

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1
பத்மனாபபுரம்.(FAC)